செய்தி வெளியீடு எண்: 338 நாள்:30.06.2009

**குடும்ப அட்டைகள் – தலத்தணிக்கை பணி தொடர்பாக அனைத்து மாவட்ட வருவாய் அலுவலகர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எ.வ. வேலு அவர்கள் ஆலோசனை.**

‘ ‘ ‘ ‘

குடும்ப அட்டைகள் தலத் தணிக்கையை மேலும் சில மாவட்டங்களில் தொடங்குவது தொடர்பாக அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களால் இன்று (30.06.2009) மாலை 4.00 மணிக்கு, சென்னை கோபாலபுரத்தில் உள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலக கூட்ட அரங்கில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் போலி அட்டைகளினால் அரசுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்களும், நிதி இழப்பும் பற்றி எடுத்துரைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் நேரடி ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

குடும்ப அட்டைகள் கணக்கெடுப்புப் பணி துவக்க,4 15.05.2008 அன்று ஆணையிடப்பட்டு கோயம்புத்தூர், திருச்சி மற்றும் சென்னையில் அண்ணாநகர் மண்டலத்தில் முதல் கட்டமாக தலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு கோவை மாவட்டத்தில் 72,633, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 93,894 மற்றும் சென்னை அண்ணாநகர் மண்டலத்தில் 25,698, ஆக மொத்தம் 1,92,225 குடும்ப அட்டைகள் போலியானவை என கண்டறியப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

15.10.2008 முதல் இரண்டாம் கட்டமாக நாகை, தூத்துக்குடி, தேனி, வேலூர், சேலம் கிருஷ்ணகிரி, கடலூர், தர்மபுரி, கரூர், நாமக்கல் ஆகிய 10 மாவட்டங்களில் தலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு 7,74,526 குடும்ப அட்டைகள் போலியானவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டு பொருள் நிறுத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உண்மையிலேயே வசித்து வந்தால் அவர்கள் மேல்முறையீடு செய்யவும், கால அவகாசம் வழங்கப்பட்டது. அதில் 1,42,799 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே மேல்முறையீடு செய்துள்ளனர். மீதமுள்ள 6,31,727 குடும்ப அட்டைதாரர்கள் மேல்முறையீடு செய்யவில்லை. இருப்பினும் மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தும் மீண்டும் விசாரணை செய்யப்பட்டு, உண்மையில் வசிப்பவர்களின் குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்படமட்டாது. மேல்முறையீடு பெறப்படாத குடும்ப அட்டைகளும், மேல் முறையீட்டில் போலியானவை என கண்டறியப்படும் குடும்ப அட்டைகள் மட்டுமே ரத்து செய்யப்படும். ரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கும் இரண்டாவது முறையாக மேல்முறையீடு செய்யவும் வாய்ப்பளிக்கப்படுகிறது, வட்ட வழங்கல் அலுவலர் நிலையில் உள்ள அலுவலர்கள் மூலம் மீண்டும் தலத் தணிக்கை செய்யப்பட்டு போலி குடும்ப அட்டைகள் என உறுதி செய்யப்படும் குடும்ப அட்டைகள் மட்டுமே இறுதியாகவும் ரத்து செய்யப்படுகிறது, எனவே உண்மையில் வசிப்பவர்களின் குடும்பங்களின் குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்படாமலிருக்க மாவட்ட வருவாய் அலுவலர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மேலும் தணிக்கை அலுவலர் முறையாக பணிகள் மேற்கொள்வதில் சமூக விரோதிகள் குறுகிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மூன்றாம் கட்டமாக 1. திருவாரூர், 2. தஞ்சாவூர், 3.இராமநாதபுரம், 4. திருநெல்வேலி, 5. கன்னியாகுமரி, 6.புதுக்கோட்டை, 7. விழுப்புரம், 8. நீலகிரி, 9. ஈரோடு 10.திருவண்ணாமலை, 11. பெரம்பலூர், 12. திண்டுக்கல், 13.சிவகங்கை, 14. விருதுநகர், 15. அரியலூர் 16. திருப்பூர் (1.காங்கேயம் மற்றும் 2. தாராபுரம் வட்டங்கள்) மாவட்டங்களில் 01.08.2009 முதல் அட்டைகள் தணிக்கை பணிகள் துவக்கப்படும்.

நியாய விலைக் கடைகளில் உள்ள 'அ' பதிவேடு மற்றும் வட்ட வழங்கல் அலுவலகத்தில் உள்ள 'அ' பதிவேடு ஒத்திசைவு (Comparative ) செய்யப்பட்டதும் கணிசமான அளவு போலிப் பதிவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தலத் தணிக்கை அலுவலர்களும் , மேல் தணிக்கை அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் மேற்கொண்டுள்ள தணிக்கை பணியின் மெய்த் தன்மையை மாவட்ட வருவாய் அலுவலகர்கள் ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் இதர மாவட்ட அளவிலான அலுவலர்கள் குறைந்தபட்சம் 10 சதவீதம் அளவிற்காவது ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தலத் தணிக்கை பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவிற்குள் முடிக்க மாவட்ட வருவாய் அலுவலர்கள் முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் தலத் தணிக்கையும் எவ்வித குறைபாடுமின்றி சரியாக செய்யப்பட வேண்டும்.

இக்கூட்டத்தில் இலவச அடுப்புடன் கூடிய எரிவாயு திட்டத்தை, வேகமாகவும் புகார் இன்றியும் தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்து பயன்களை வழங்கி 31.07.2009க்குள் முடிக்கவும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. கே.ராசாராம், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு.சந்திரசேகரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் பங்கு பெற்றனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**